# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்


208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

தொலைபேசி போன் : 2363 5010, நிகரி : 2363 8282, 2363 8283

மின்னஞ்சல் - tnsec.tn@nic.in, இணையதளம் - www. tnsec.tn@nic.in


## சுதந்திர தின விழா செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண். 02/2021 நாள் 15.08.2021

2021-ம் ஆண்டு, சுதந்திர தின விழாவினை முன்னிட்டு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தில் மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார், இ.ஆ.ப.,(ஓ), அவர்கள் தேசியக் கொடியேற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

சென்னை, அரும்பாக்கம், கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய வளாகத்தில் சுதந்திர தின திருநாளை முன்னிட்டு இன்று (15.08.2021) தேசியக்கொடி ஏற்றும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. **மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார், இ.ஆ.ப.,(ஓ)** அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தியபின், காவல்துறை மரியாதையை ஏற்றுக் கொண்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு இனிப்பு வழங்கி தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்கள். அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாநில தேர்தல் ஆணைய செயலாளர் **திருமதி எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப.,** அவர்கள், முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு க. அருண்மணி, முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி கு. தனலட்சுமி, நிதி ஆலோசகர் திரு கோ. ஜெய்குமார், தலைமை நிர்வாக அலுவலர் திருமதி வி. மைதிலி, உதவி ஆணையர் (தேர்தல்) திரு அகஸ்ரீ சம்பத்குமார் மற்றும் அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

15/8/2021

மக்கள் தொடர்பு அலுவலர்